பக்கங்கள்:-21

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 17 | சனிக்கிழமை | 01.03.2025 | அதிர்வு 209 |
|---|---|---|---|---|---|

## ரமழான் நோன்பு நாளை ஆரம்பம்



புனித ரமழான் நோன்பு நாளை ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிப்பதாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது. 06

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும்

## நாடாளுமன்றில் ஜனாதிபதி அநுர உறுதி



"எமது கொள்கைப் பிரகடனத்துக்கு அமையப் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழு நிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று கருத்துரைத்தபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மக்கள் அன்றாடப் பணிகளை முன்கொண்டு செல்வதில் எந்த அச்சுறுத்தலும் 06

# உள்ளாட்சித் தேர்தல் மே முதல் வாரத்தில்!




## அடுத்த வாரத்தில் அறிவிப்பு

**நிலுவையில் இருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் மே முதல் வாரத்தில் நடத்துவதற்குத் தேர்தல் ஆணையம் பூர்வாங்கமாகத் தீர்மானித்திருப்பதாக நம்பகமாக அறியவந்தது.**

**தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் எதிர்வரும் வாரத்தில் வெளியாகும் எனத் தெரிகின்றது.** 06

### கனேமுல்ல சஞ்சீவ கொலை:

## முக்கிய சந்தேகநபர்கள் இருவர் நேற்று சிக்கினர்



பாதாள உலகக் குழுவின் தலைவர் கனேமுல்ல சஞ்சீவவின் படுகொலையைத் திட்டமிட்டனர் எனக் கூறப்படும் இரண்டு முக்கிய சந்தேகநபர்கள் நேற்று கைதாகியுள்ளனர். 06

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்யுமாறு உத்தரவு!



### மாத்தறை நீதிமன்றம் அதிரடி

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்யுமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி மாத்தறை – பெலேன பகுதியிலுள்ள ஹோட்டலொன்றுக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக அவரைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி அன்ஸ்லம் டி சில்வா உள்ளிட்ட 6 சந்தேகநபர்களைக் கைது செய்யும்படி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 06




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன – பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சேர்ந்து அமைத்த நல்லாட்சி அரசு அதிகாரத்துக்கு வந்தது 2015 ஜனவரியில் ஆகும். ஏறத்தாழ 10 ஆண்டுகள் கடந்துவிட்டன.

அந்த ஆட்சிக்கு மட்டுமல்ல, அந்த அரசு அதிகாரத்துக்கு வந்த கையோடு இலங்கையின் மூலதனச் சந்தை வரலாற்றில் மிகவும் சர்ச்சைக்குரிய பிணைமுறி ஊழல் விவகாரம் அரங்கேறியும் 10 வருடங்கள் ஆகிவிட்டன.

பெப்ரவரி 27, 2015 அன்று நூறு கோடி ரூபா மதிப்பிலான பிணைமுறிப் பத்திரங்களை ஏலத்துக்கு விட மத்திய வங்கி தீர்மானித்திருந்தது.

அப்போது நடைமுறையில் இருந்த வட்டி வீதம் சராசரியாக 9.5 வீதம் ஆகும். அந்த வீதத்தை ஒட்டி இந்தப் பிணை முறி ஏலத்துக்குப் போகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த வீதத்தை ஒட்டி, சுமார் 30 ஆண்டு காலத்தில் பின்னர் மீளளிப்புச் செய்யக்கூடிய பிணைமுறிகளை விடுவதற்கு மத்திய வங்கி 06

# திறந்தவெளி சிறைக்குள்ளேயே இன்றும் வாழ்கின்றனர் தமிழர்

## சபையில் சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

14 பேருக்கு ஒரு படைச் சிப்பாய் என்ற அடிப்படையில் இலங்கையின்பாதுகாப்புதரப்புஅமையப்பெற்றுள்ளது இலங்கைத்தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இந்தப் படையினரில் நான்கில் மூன்று பகுதியினர் வடக்கு, கிழக்கில் குவிக்கப்பட்டுள்ளனர் என்றும் சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பான குழுநிலை விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“திறந்தவெளி சிறைச்சாலைக்குள் இன்றும் தமிழர்கள் வாழும் நிலையே இந்த நாட்டில் உள்ளது.

யுத்தம் இல்லாத நாட்டுக்கு ஏன் இவ்வளவு படையினர்?

சொந்த நாட்டுக்குள்ளேயே அகதிகளாக வாழும் தமிழ் மக்களின் நிலங்களை விடுவிப்பதற்கான நேர்த்தியான வேலைத்திட்டத்தை எந்த அரசும் இதுவரை செய்யவில்லை என்பதுதான் கவலைக்குரிய விடயம்.” – என்றார்.



# அரிசியை அதிக விலைக்கு விற்போர் தொடர்பில் அறிவிப்பதற்கான விசேட தொலைபேசி இலக்கம்



நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிக விலைக்கு கீரி சம்பா அரிசி தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

கீரி சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 260 ரூபாய் என்ற நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே விற்பனை செய்யப்பட வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகார சபையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, 260 ரூபாவுக்கு அரிசியை விற்பனை செய்யும் விற்பனையாளர்களிடம் இருந்து மாத்திரம் அரிசியைக் கொள்வனவு செய்யுமாறு நுகர்வோருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட அதிகமான விலைக்குக் கீரி சம்பா அரிசி விற்பனை செய்யப்படுமானால், 1977 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்குமாறும் நுகர்வோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



# வலிகாமம் வடக்குக்கு ஆளுநர் திடீர் கண்காணிப்பு விஜயம்

வலிகாமம் வடக்கில் பல்வேறு பகுதிகளுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் திடீர் கண்காணிப்புப் பயணத்தை மேற்கொண்டார்.

வலி. வடக்கில் மக்கள் பாவனைக்குக் கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வசாவிளான் கிழக்கு, வசாவிளான் மேற்கு, பலாலி தெற்கு, பலாலி கிழக்கு, பலாலி வடக்கு ஆகிய 5 கிராம அலுவலர் பிரிவுகளும் மக்கள் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலைமை இன்னமும் காணப்படுகின்றது.

பாதுகாப்புத் தரப்பினரின் வேலி பின்நகர்த்தப்படாமையால் இவ்வாறான சூழல் நிலவுகின்றமை தொடர்பில் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன் இந்தப் பகுதியிலுள்ள பலாலி சித்தி விநாயகர் பாடசாலையின் இடிபாடுகளுடன் கூடிய கட்டடத்தையும் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து கடந்த காலங்களில் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி கலைமகள் வித்தியாலயத்தின் மைதானத்தின் ஒரு பகுதி பாதுகாப்புத் தரப்பினர் வசம் உள்ளதையும் ஆளுநர் சென்று பார்வையிட்டார்.

மயிலிட்டித்துறைமுகத்தில் இந்திய மீனவர்களது படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமையால் மீனவர்கள் எதிர்கொள்ளும் இடர்கள் தொடர்பாகவும் ஆளுநர் ஆராய்ந்தார்.

மயிலிட்டி வைத்தியசாலை வீதி கடந்த காலங்களில் கொங்கிரீட் வீதியாக அமைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அதனை மூடி சுகாதாரத் திணைக்களத்தால் வேலி அடைக்கப்பட்டுள்ளதாக மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பிலும் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

அதேபோல் காங்கேசன்துறையிலுள்ள சிறுவர் பூங்காவுக்கான பாதையை பாதுகாப்புத் தரப்பினர் மூடி வைத்துள்ளமையால் எழுந்துள்ள நெருக்கடி தொடர்பாகவும் ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

மேலும், காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் பிரதேச சபையின் பாதையை மூடி தடுப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளதையும் ஆளுநர் பார்வையிட்டார். அத்தடன் கீரிமலையிலுள்ள செம்மண்வாய்க்கால் இந்து மயானத்துக்கான பாதை பற்றைகள் மூடி உள்ளமையையும் அதனால் மக்கள் தனியார் பாதை ஊடாகச் சென்று வருகின்றமையும் ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் அதனையும் ஆளுநர் நேரடியாகப் பார்வையிட்டிருந்தார்.

இது தொடர்பில் துறைசார் தரப்புக்களுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு ஆளுநர் திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.












# வெலிஓயா பிரதேச செயலகத்தில் நடைபெற்ற முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலர் மாநாடு

(பா.சதீசன்)

2025 ஆம் ஆண்டுக்கான முல்லைத்தீவு மாவட்ட பிரதேச செயலாளர் மாநாடு நேற்று காலை வெலிஓயா பிரதேச செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆறு பிரதேச செயலகங்களை உள்ளடக்கியதாக மாவட்ட பிரதேச செயலாளர் மாநாடு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரதேச செயலத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டதன் கீழ் நேற்று 2025 ஆம் ஆண்டுக்கான இரண்டாவது பிரதேச செயலாளர் மாநாடு வெலிஓயா பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன் முதலாவது மாநாடு கடந்த மாதம் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நேற்று வெலிஓயா பிரதேச செயலகத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலகத்தின் பௌதீக சூழலை முதலில் பார்வையிட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற பிரதேச செயலாளர் மாநாட்டில் பிரதேச செயலகங்களின் நிர்வாக, நிதி, திட்டமிடல் செயற்பாடுகள், முன்னேற்றங்கள், குறைபாடுகள், சமூக நலச்சேவை செயற்பாடுகள், அபிவிருத்தித் திட்டங்கள், இந்த வருடத்தில் செயற்படுத்த வேண்டிய திட்டங்கள், 2025 வரவு – செலவுத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும், வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவில் இனங்காணப்பட்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வு நடவடிக்கைகள் மற்றும் “தூய்மையான இலங்கை” திட்டத்தைச் செயற்படுத்துதல் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.குணபாலன், மாவட்ட பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், மாவட்ட பிரதம கணக்காளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாந்தைகிழக்கு, துணுக்காய், கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வெலிஓயா முதலான பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் உதவி மாவட்ட செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.





# யோகாசன நிகழ்வு

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு பருத்தித்துறை சிவன் கோவில் வளாகத்தில் கடந்த புதன் கிழமை மாலை முதல் மறு நாள் அதிகாலை வரை கலை நிகழ்வுகள் அரங்கேற்றம் செய்யப்பட்ட நிலையில், யோகா ஆசான் மா. இரத்தினசோதியின் நெறிப்படுத்தலில் அவரது மாணவர்களினால் யோகாசனங்கள் அரங்கில் நிகழ்த்திக் காண்பிக்கப்பட்டிருந்தன.

யோக கலை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யோகா ஆசான் மா.இரத்தினசோதியின் மாணவர்களினால் ஆசனங்கள் செய்து காண்பிக்கப்பட்டன.

தேசிய மட்டம் மற்றும் சர்வதேச அளவிலான யோகா போட்டிகளில் பங்கேற்று தங்கப் பதக்கங்களை வென்று வடமராட்சிக்கு பெருமைசேர்த்துள்ள மாணவர்களினால் கடினமான ஆசனங்கள் அநாயாசமாக செய்து காண்பிக்கப்பட்டிருந்தன.





# காலணி வவுச்சர் சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு






பாடசாலை மாணவர்களுக்கு காலணிகள் வழங்குவதற்கான வவுச்சர் சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர், காலணிக்கான வவுச்சர் சீட்டுகள் செல்லுபடியாகும் காலம் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதேவேளை காலணிகளுக்கான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலத்தை மார்ச் மாதம் 20 திகதி வரை நீடித்துள்ளதாக குறிப்பிட்டு கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானித்திருந்தது.

ஆயினும் சுமார் 2,070 கோடி ரூபா வரை பிணைமுறி பெறுவதற்கு ஏலத்தில் உரியவர்கள் தயாராக இருந்தனர்.

ஆயினும் வழமைக்கு மாறாக 1,000 கோடி 58 லட்சம் ரூபா பெறுமதியான பிணைமுறிகளை 12.5 வீதம் என்ற உயர் வட்டி வீதத்தில் மத்திய வங்கி ஏலத்தில் பெற்றுக் கொண்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. வழமையான வட்டி வீதங்களுக்கு மாறாக மூன்று வீதம் அதிகமான வட்டிக்கு பிணைமுறிகளை மத்திய வங்கி வழங்கியமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது பெரும் ஊழல் என்று குரல் எழுப்பப்பட்டது. அதனால் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுனா மகேந்திரன் தமது பதவியை இழந்தார். இந்தப் பிணைமுறி பரிவர்த்தனையில் முக்கிய பங்காளியான பேர்ப்பச்சுவல் ட்ரஸ்டீஸ் நிறுவனத்தின் தலைவரும், அர்ஜுனா மகேந்திரனின் மருமகனுமான அர்ஜுன் அலோசியஸ் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டார். மத்திய வங்கி ஆளுநருக்கும், பிணைமுறி ஏலத்தில் பெருந்தொகை பிணைமுறிகளை உயர்ந்த வட்டி வீதத்தில் பெற்ற அவர் மருமகனுக்கும் இடையிலான உறவுமுறை பெரும் அரசியல் களேபரத்தை ஏற்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக அப்போதைய நிதி அமைச்சர் ரவி கருணநாயக்காவும் தம் பதவியை ராஜினாமாச் செய்ய வேண்டிய வரானார்.

பத்து ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் இது தொடர்பான நடவடிக்கைகள், வழக்குகள் இன்னும் தொடர்கின்றன. இந்தச் சம்பவத்தை அடுத்து சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுனா மகேந்திரன் சிங்கப்பூரில் பதுங்கிக் கொண்டு விட்டார். அவரை இலங்கைக்கு நாடு கடத்தச் செய்வதற்கு கொழும்பு அரசுகள் எடுத்த முயற்சிகள் அவமாகிப் போயின. பத்து ஆண்டுகள் கடந்தும் இந்த ஊழல் தொடர்பான வழக்கில் முன்னேற்றம் ஏற்படவில்லை. மார்ச் 2045 அன்று முதிர்ச்சி அடையும் பிணை முறிகளின் காலத்தில் மூன்றில் ஒரு பங்கு ஏற்கனவே முடிந்துவிட்டது.

ஆயினும் இந்தப் பணப்பரிவர்த்தனை மூலம் அர்ஜுனா மகேந்திரனின் மருமகன் அர்ஜுன் அலோசியஸ் பெற்றுக் கொண்ட பிணைமுறிகள் இன்னும் முடக்கப்பட்டே இருக்கின்றன.

\+ \+ \+

ஊராட்சி தேர்தலுக்காக தமிழ் தேசிய கட்சிகள் தங்களுக்குள் கன்னை பிரிந்தும் அணி வகுத்தும் செயற்படத் தொடங்கிவிட்டன. ஆயினும் பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒரு விடயத்தை மறந்த விடக்கூடாது. முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இணைந்து நின்ற அந்தக் கட்சிகள், மீண்டும் அவ்வாறு இணைந்து செயல்பட இன்னும் கதவுகள் திறந்தே உள்ளன. பெரும்பாலும் தற்போதைய உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது அதற்கு வாய்ப்பு இல்லாமல் போகலாம். ஆனால் உள்ளூராட்சி தேர்தலை ஒட்டிய அணிசேரல்கள், பிளவுகள், கால்வாரல்கள் அந்தத் தேர்தலின் பின்னர் மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கான வாய்ப்புகளைத் தகர்த்து விடக் கூடாது என்பதை தமிழ் தேசியக் கட்சிகள் மறக்காமல் இருப்பது நல்லது. இந்தச் சந்தர்ப்பத்தில் அதை நினைவூட்டுவது பொருத்தமானது என நினைக்கிறேன்.

## பயங்கரவாதத் தடைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இல்லை.

இதுவரையில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற போர்வையில் இனவாதமும் அடிப்படைவாதமுமே காணப்பட்டது.

எனவே, நாட்டில் மீண்டும் இனவாதமும் அடிப்படை வாதமும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

தற்போது பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் கருத்துரைக்கப்படுகின்றது.

அந்தச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகவும் உள்ளது.

எனினும், நாட்டில் தற்போது இடம் பெறுகின்ற திட்டமிட்ட குற்றக் குழுக்களின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான தனியானதொரு சட்டம் இல்லை.

இருப்பினும் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் புதியதொரு சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்று அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே நாங்கள் கூறியுள்ளோம்.

இதன்படி, திட்டமிட்ட குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காகப் புதியதொரு சட்டத்தை உருவாக்கி அதனூடாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்காகக் குழுவொன்று நியமிக்கப்பட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இது பல தசாப்தங்களாக மக்களின் கோரிக்கையாக உள்ளது. அதனை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோன்று திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய தரப்பினரைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்." – என்றார்.

## முக்கிய சந்தேக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த வாரம் கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்தில் சட்டத்தரணி போல் வேடமிட்டு வருகை தந்த ஒருவரால் கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொல்லப்பட்டார்.

கனேமுல்ல சஞ்சீவவைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டுக் கொடுத்தமை தொடர்பான சந்தேகத்தின் பேரிலேயே பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.

கம்பஹாபகுதியில்வைத்துக்கொழும்பு குற்றப் பிரிவினரால் இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு குற்றப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொலைக்காகச் சதி செய்த குற்றச்சாட்டின் கீழ் அவர்களைக் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## ரமழான் நோன்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஹிஜ்ரி 1446 புனித ரமழான் மாத தலைப் பிறையைத் தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு நேற்று வெள்ளிக்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையைத் தொடர்ந்து கொழும்பு பெரிய பள்ளிவாசலில் இடம் பெற்றது.

இந்த மாநாட்டில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, கொழும்பு பெரிய பள்ளிவாசல், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், வளிமண்டலவியல் திணைக்கள பிரதிநிதி மற்றும் உலமாக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது நாட்டின் எப்பிரதேசங்களிலும் ரமழான் மாத தலைப்பிறை தென்பட்டதற்கான ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைக்கவில்லை.

எனவே, ஷஹ்பான் மாதத்தை 30 ஆகப் பூரணப்படுத்தி நாளை ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 2) புனித நோன்பு ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது இரு கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

## உள்ளாட்சித் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேர்தல் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைகளின் பட்டியல் விவரங்கள் (மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் பற்றிய விவரங்கள்) இரண்டொரு நாள்களில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் முதலில் வெளியிடப்படும் எனத் தெரிகின்றது.

அதன் பின்னர் சில நாள்கள் கழித்து தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ வர்த்தமானி அறிவித்தல் வெளியாகும் என விடயம் அறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அந்த உத்தியோகபூர்வ அறிவித்தலில், அது வெளியான நாளிலிருந்து 14 நாள்கள் கழித்து 18 ஆவது நாள் வரை மூன்றரை நாள்கள் வேட்புமனுக்கள் ஏற்பதற்கான தினங்களாக அறிவிக்கப்படும் எனத் தெரிகின்றது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தப் பணி பூர்த்தி அடைந்ததும், ஐந்து முதல் ஏழு வார காலம் தேர்தல் பிரச்சாரத்துக்கு இடம் அளித்து அதற்கேற்ற வகையில் தேர்தல் தினம் அறிவிக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைய வட்டாரங்கள் கூறுகின்றன.

அடுத்த வாரத்தில் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிக்கை என்ன திகதியில் வெளியாகின்றதோ அதிலிருந்து ஏறத்தாழ சரியாக இரண்டு மாதங்கள் கழித்து மே முதல் வாரத்தில் – பெரும்பாலும் அதே திகதியில் – தேர்தல் நடத்தக் கூடிய வாய்ப்புகள் இருப்பதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தேர்தல் தொடர்பான முதல் உத்தியோகபூர்வ அறிவிப்பில் வேட்புமனுக்கள் ஏற்பது தொர்பான திகதிகள் மற்றும் நேரங்கள், இடங்கள் பற்றிய விவரங்களே இடம்பெற்றிருக்கும். வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்வது பூர்த்தியானதும் தேர்தல் அடுத்த ஐந்து முதல் ஏழு வாரத்துக்குள் இடம்பெறக்கூடியதாக தேர்தல் திகதி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் தெரிகின்றது.




# பாதுகாப்பு அமைச்சின் செலவு அறிக்கை மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

பாதுகாப்பு அமைச்சின் செலவு அறிக்கைமீதான வாக்கெடுப்பு நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

செலவு அறிக்கைக்கு ஆதரவாக 88 வாக்குகளும் எதிராக 10 வாக்குகளும் மாத்திரமே பதிவாகின.

அதன்படி, பாதுகாப்பு அமைச்சின் செலவு அறிக்கை 78 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.



# நாட்டின் முதன்மை பணவீக்கம் வீழ்ச்சி



கொழும்பு நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் பெப்ரவரி மாதத்தில் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் மறை 4 சதவீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் பெப்ரவரி மாதத்தில் மறை 4.2 சதவீதமாக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதேவேளைக் கடந்த ஜனவரி மாதம் மறை 2.6 சதவீதமாக இருந்த உணவு பணவீக்கம் இந்த மாதம் மறை 0.2 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

ஜனவரி மாதத்தில் மறை 4.7 சதவீதமாக இருந்த உணவல்லா பணவீக்கம் இந்த மாதம் மறை 6.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அநுரவின் அபத்தம்

நாம் இப்பத்தியில் அடிக்கடி சுட்டிக் காட்டும் விடயம் ‘கணக்குப்பிள்ளை பேசக்கூடாது, கணக்குப் புத்தகம் பேச வேண்டும்’ என்பதாகும்.

ஆனால் இந்த விதிக்குள் இலங்கையின் அரசியல்வாதிகள் எப்போதும் வருவதில்லை. கணக்குப் புத்தகத்தில் கணக்கு வேறாக இருக்க, நமது அரசியல்வாதிகள் பேசும் விடயம் அல்லது விடும் கணக்கு வேறாக இருக்கும். இதுதான் இங்கு வழமையான போக்கு. இதிலிருந்து தாமும் வேறுபட்டவர் அல்லர் என்பதை நேற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா கூட நிரூபித்து நிற்கின்றார்.

வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பான நிதி ஒதுக்கீட்டை ஒட்டி அவர் நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை கணக்குப் புத்தகத்திற்கு மாறாக கணக்கு விடும் தந்திரமாகவே அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் காட்டுமிராண்டித்தனமான சகாப்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாகரிகத்துக்கு வழிவகுத்துள்ளது என்று அவர் அந்த உரையில் பெரும் கணக்கு விட்டிருக்கின்றார்.

காட்டுமிராண்டித்தனமான சகாப்தத்தை முடிவுக்கு கொண்டு வருவது என்பது, இதுவரை இடம்பெற்ற காட்டுமிராண்டித்தனத்தை மூடி மறைப்பது அல்ல என்பது அவருக்கும் அவர் சார்ந்த அரசுக்கும் தெரியாத விடயம் அல்ல.

மனித நாகரிகப் பண்பியல்புக்குத் திரும்புவது என்பது காட்டுமிராண்டித்தனத்துக்கும் அதன் கீழான குற்றங்களுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கும் - நீதி நியாயத்தை நிலை நாட்டும் - பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்தும் - செயற்பாடு என்பதை அவருக்கு யாரும் விளங்கப் படுத்த தேவையில்லை. அதுதான் உண்மை நிலைமை. அதுதான் நீதி. அதுதான் நியாயம்.

இந்த நாட்டில் பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் பெயரால் இழைக்கப்பட்ட அரச பயங்கரவாதத்தை - யுத்தக் குற்றங்களை - மனித குலத்துக்கு எதிரான கொடூரங்களை - அடிப்படை உரிமை மீறல் நடவடிக்கைகளை - முற்றாக மூடி மறைத்து, நியாயம் செய்ய இடமளிக்காமல் அடாவடித்தனம் பண்ணிக்கொண்டு, மனித நாகரிக ஆட்சியை மீட்டுக் கொண்டு வந்து விட்டதாக ஜனாதிபதியே புளுகுவது - அதுவும் நாட்டின் உயர்ந்த சபையான நாடாளுமன்றத்திலேயே போய் நின்று கொண்டு அலப்பறை பண்ணுவது - அபத்தமாகும்.

கணக்குப் புத்தகத்தில் இருக்கும் உண்மைக்கு மாறாக கணக்கு விடும் மூன்றாம் தர அரசியல்தான் அது.

உண்மையில் நாகரிகமான அரசை - மனிதப் பண்பியல்பு கொண்ட ஆட்சியை - இந்த நாட்டில் தாம் மீண்டும் ஏற்படுத்தி இருக்கிறார் எனத் தமக்குத் தாமே அவர் மகுடம் சூட்டுவதானால், அதற்கு முன்னர் இந்த மண்ணில் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நீதி விசாரணை முறைமைகளையும், பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளையும் அவர் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும்.

அதைச் செய்யாமல் அடாவடித்தனம் பண்ணி மறுத்துக்கொண்டு, நாகரிக ஆட்சியை அதிகாரத்துக்குக் கொண்டு வந்து இருப்பதாக அவர் புளுகுவது பெரும் அபத்தம்.

நடந்த கொடூரங்களுக்கு நீதி கிடைக்காமல் மூடி மறைக்கத் துணை போவது கூட காட்டுமிராண்டித்தனம்தான். அதையே செய்து கொண்டு மனித நாகரிக ஆட்சியை எற்படுத்தி விட்டதாக பொய் கணக்கு விடுகின்றார் அநுர குமார....!



# 2 ஆம் கட்ட போர் நிறுத்த பேச்சு; இஸ்ரேலுக்கு ஹமாஸ் அழைப்பு

இஸ்ரேல் – காஸாவுக்கிடையிலான போரை முடிவுக்கு கொண்டுவருதல் தொடர்பாக பேச்சுவார்த்தையை நடத்த இஸ்ரேலுக்கு ஹமாஸ் அமைப்பினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

அந்தவகையில் ஆறு வாரகால முதல்கட்ட போர்நிறுத்தம் இன்று முடிவுக்கு வருகிறது.

அதைத் தொடர்ந்து, எஞ்சியுள்ள அனைத்து இஸ்ரேல் பணயக் கைதிகளையும் ஹமாஸ் அமைப்பினர் விடுதலை செய்தல் மற்றும் காஸாவில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துதல் ஆகிய அம்சங்கள் அடங்கிய இரண்டாவது கட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைக்குத் தயார் என ஹமாஸ் அமைப்பினர் தற்போது அறிவித்துள்ளனர்.

மேலும், மீதமுள்ள பிணைக் கைதிகளை விடுவிக்க பேச்சுவார்த்தை மூலம் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்வது மட்டுமே ஒரே வழி.

அத்தோடு, இஸ்ரேல் மீண்டும் தாக்குதலை தொடர்ந்தால், பிணைக் கைதிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் அதிக பாதிப்பை அனுபவிக்க நேரிடும் என ஹமாஸ் அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.








# உக்ரைன் ஜனாதிபதியை பாராட்டினார் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உக்ரைன் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலஸ்கியைப் பாராட்டியுள்ளார்.

உக்ரைன் – ரஷ்யா போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து பிரித்தானியா பிரதமர் கெய்ர் ஸ்டார்மருடன் இடம்பெற்ற கலந்துரையாடலுக்குப் பிறகு ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

டொனால்ட் ட்ரம்ப், உக்ரைன் ஜனாதிபதி மீது தனக்கு மிகுந்த மரியாதை இருப்பதாகவும், அவர் மிகவும் துணிச்சலான நபர் என்றும் கூறினார்.

இருப்பினும், டொனால்ட் ட்ரம்ப் சில நாள்களுக்கு முன் உக்ரைன் ஜனாதிபதியை ஒரு சர்வாதிகாரி என்று அழைத்திருந்தார்.

பிரித்தானியா பிரதமருடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, எதிர்காலத்தில் தனது நாட்டிற்கு உக்ரேனிய கனிம வளங்களைப் பெறுவதற்கான ஒப்பந்தத்தில் ஜனாதிபதி வொளாடிமிர் ஜெலஸ்கி கையெழுத்திடுவார் என அமெரிக்க ஜனாதிபதி தெரிவித்தார்.

# மெக்சிகோவின் கடத்தல்காரர்கள் அமெரிக்காவுக்கு நாடுகடத்தல்



மெக்சிகோவில் வசித்து வந்த மிகவும் பிரபலமான போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சிலர் நேற்று முன்தினம் அமெரிக்காவிற்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர்.

நாடுகடத்தப்பட்ட 29 பேரில் அமெரிக்கப் புலனாய்வு முகவரை கொலைசெய்ததற்காகப் பல தசாப்த காலமாகத் தேடப்பட்டு வந்த ரஃபேல் காரோ குயன்ரீரோ என்பவரும் அடங்குகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுகடத்தப்பட்டவர்கள் அமெரிக்க நீதித்துறை சட்டங்களுக்கு அமைய மரண தண்டனையை எதிர்கொள்ள நேரிடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோத இடம்பெயர்வு மற்றும் போதைப்பொருள் விடயங்களுடன் டொனால்ட் ட்ரம்பை தொடர்புப்படுத்தியுள்ள வர்த்தக நடவடிக்கைகளைத் தவிர்க்க அமெரிக்காவுடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள மெக்சிகோ போராடி வரும் நிலையில், முற்றிலும் எதிர்பாராத நிலையில் நாடுகடத்தல்கள் இடம்பெற்றுள்ளன.

இது தவிர, டொனால்ட் ட்ரம்ப் எட்டு லத்தீன் அமெரிக்கப் போதைப்பொருள் கடத்தல் அமைப்புக்களையும், ஆறு மெக்சிக்கன் பாரிய கடத்தல்காரர்களையும், பயங்கரவாத அமைப்புகள் எனப் பெயரிட்டுள்ளார்.

வன்முறை அமைப்புக்களால் அப்பாவி மக்களைப் பாதுகாப்பதற்காக தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த, சில சந்தர்ப்பங்களில் தங்கள் உயிரைக் கொடுத்த துணிச்சலான சட்ட அமுலாக்கத் தரப்பினரைக் கௌரவிக்கும் வகையில் கடத்தல் காரர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டம் பிரயோகிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரே நேரத்தில், அதிக எண்ணிக்கையிலான சந்தேக நபர்களை ஒப்படைத்து, வரலாற்றுச் சிறப்பை கொண்டது என அமெரிக்கப் போதைப்பொருள் அமுலாக்க நிர்வாகத்தின், முன்னாள் சர்வதேச நடவடிக்கைகளின் தலைவரான மைக் விஜில் தெரிவித்துள்ளார்.




# நுகர்வோரின் வைப்புக்கு வட்டியைச் செலுத்தவும் இலங்கை மின்சார சபைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

மின்சாரம் வழங்கப்படும் போது நுகர்வோரிடம் இருந்து பெறப்படும் வைப்புத் தொகைக்கான வருடாந்த வட்டியைச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏ.எஸ்.துறைராசா, உள்ளிட்ட மூவர் அடங்கிய நீதியரசர்கள் ஆயத்தினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையினால் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவிற்கு அமைய,

இலங்கை மத்திய வங்கியினால் செலுத்தப்படும் 11.67 வீத வட்டியை மின்சார நுகர்வோருக்குச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இலங்கை மின்சாரசபை சட்டத்துக்கு அமையப் பெறப்படும் வட்டியை நுகர்வோருக்கு செலுத்துமாறுக்கோரி மின்சார மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பாவனையாளர் சங்கத்தின் தலைவர் மகேஷ பண்டார இலங்கசிங்க மற்றும் செயலாளர் பிரசாத் பாதியா அமரகோன் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு இன்று உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனுவில் மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர், அமைச்சின் செயலாளர், பொதுப்பயன்பாடு ஆணைக்குழு மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

# நாட்டில் மீண்டும் எரிபொருள் வரிசை




நாட்டின் பல பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று நீண்ட வரிசைகள் காணப்பட்டன.

நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் கொள்வனவு கட்டளை செய்யும் நடவடிக்கைகளிலிருந்து விலகுவதாக எரிபொருள் விநியோகத்தர்கள் சங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து எரிபொருளுக்கான வரிசை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இன்று முதல் எரிபொருளுக்கு வழங்கப்படும் 3 வீத கழிவை இரத்து செய்யத் தீர்மானம் எடுத்துள்ளது.

இந்த தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே எரிபொருள் கொள்வனவு கட்டளை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட மாட்டாது என எரிபொருள் விநியோகத்தர்கள் சங்கம் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது கருத்து தெரிவித்திருந்தது.

இன்று முதல் நாடு முழுவதும் எரிபொருள் விநியோகத்தர்களுக்கு எரிபொருள் விநியோகத்தில் 3 வீத கழிவை இரத்து செய்ய இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்தது.

எனினும் நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை என்றும், வழமைபோல் கொள்வனவு கட்டளைகள் பெறப்பட்டுள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, எரிபொருள் விநியோகிக்கும் பணிகள் வழமைபோல் நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டார்.

# வடக்கு நிலைமை பற்றிய விவரங்களை கோருகிறது நாடாளுமன்றச் செயலகம்


(ந.லோகதயாளன்)

வடக்கின் ஐந்து மாவட்டச் செயலகங்கள் மற்றும் வடக்கு மாகாண சபை ஆகியவற்றுக்கு 2009 ஆம் ஆண்டின் பின்பு 2024 ஆம் ஆண்டு வரை ஒதுக்கிய நிதி எவ்வளவு, அதில் இருந்து எவ்வளவு தொகை மீண்டும் கொழும்பிற்கு திரும்பியது என்ற விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு நாடாளுமன்றச் செயலாளர் எழுத்தில் கோரியுள்ளார்.

மத்திய அரசில் விடுவிக்கப்பட்டு திரும்பிய நிதி விவரம் என்பவற்றின் விபரங்களை சமர்ப்பிக்குமாறே சகல மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மாகாண பிரதம செயலாளர் ஆகியோரிடம் 2025-02-27 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது.

இதேபோன்று வடக்கின் 5 மாவட்டங்களிலும் தற்போதும் உயர் பாதுகாப்பு வலயமாக எவ்வளவு நிலம் உள்ளது? போரிற்கு முன்னர் இயங்கி போரின் காரணமாக அழிவடைந்த தொழிற்சாலைகள் எவை? போன்ற விவரங்களும் கோரப்பட்டுள்ளன.

புலம்பெயர்ந்த தங்கள் மாவட்டங்களைச் சேர்ந்த எத்தனை பேர் தற்போது தாயகம் திரும்பத் தயாராகவுள்ளனர் என்பதனையும் மாவட்டத்தில் எத்தனை குடும்பங்களிற்கு காணி உரிமை இல்லை என்ற விவரங்களையும் எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.



PARLIAMENT

OFFICE OF THE SECRETARY GENERAL OF PARLIAMENT

Department of Legislative Services - Library

PS/LEG/LIB/R/2025/05 (i)

Dear Sir

URGENT – REQUEST FOR INFORMATION ON DEVELOPMENT, SECURITY, AND SOCIAL ISSUES IN THE MANNAR DISTRICT (2009-2024)

The following information is required for the upcoming Parliamentary Debates. Therefore, you are kindly requested to make the necessary arrangements to provide the following information on or before 07.03.2025.

i. How much funding did the Government allocate to your district for various development projects from 2009 to 2024?
ii. How much money did the District Secretary return to the Central Government from 2009 to 2024?
iii. How many acres of private and government land in the Jaffna district have been designated as high-security zones?
iv. How many people are awaiting to return to their homeland in the Jaffna district?
v. How many families in the Jaffna district do not have land ownership?
vi. What actions have been taken to address drug consumption, addiction, gang violence, and other related issues in the Jaffna district?
vii. Do you have any information regarding the increasing drug abuse, alcohol consumption, and smuggling activities among the youth in the Jaffna district?
viii. Are any measures being taken to prevent these activities?
ix. What specific actions have been implemented to address these issues?

You are also requested to provide the above information to the following telephone number, fax number or email address. If you need further information or inquiries, please contact Visvalinagam Muralitahs Research Officer, Parliamentary Research Division.

Telephone Number : 0112777620
Fax Number : 0112777291
Email Address : muralithas_v@parliament.lk

Your cooperation in this regard is highly appreciated.

M. Jayalath Perera
Director (Legislative Services) and Actg. Director (Communication)
for Secretary General of Parliament

M. Jayalath Perera
Director (Legislative Services)
& Actg. Director (Communication)
Parliament of Sri Lanka
Sri Jayawardenapura Kotte



# எரிபொருள் விலையில் மாற்றம் இல்லை

எரிபொருள் விலை திருத்தம் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் கீழ் இம்முறை திருத்தம் செய்யப்படமாட்டாது எனக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஒக்டேன் 92 பெட்ரோல் ஒரு லீற்றரின் விலை 309.00 ரூபா

ஒக்டேன் 95 பெட்ரோல் ஒரு லீற்றரின் விலை 371.00 ரூபா

வெள்ளை டீசல் ஒரு லீற்றரின் விலை 286.00 ரூபா,

சூப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 331.00 ரூபா,

மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 183.00 ரூபா

எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.



# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி: அநுர அரசின் நிலைப்பாடுதான் என்ன...?



கி.வசந்தரூபன்

போர் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்து செல்லும் நிலையில் இலங்கை இராணுவத்தால் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறத் தவறியிருக்கின்றது.

தமிழ் மக்கள் மத்தியில் அவர்களது அன்றாட வாழ்வியலுடன் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல பிரச்சினைகள் இருக்கின்றன. இலங்கை இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட நிலத்தை விடுவித்தல், சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல், புனர்வாழ்வின் பின் விடுதலையான முன்னாள் போராளிகளை மீண்டும் கைது செய்யா வண்ணம் பாதுகாத்தல், பௌத்தமயமாக்கலை தடுத்தல், தமிழர் நிலப் பரப்பில் இடம்பெறும் குடியேற்றங்களை தடுத்தல், யுத்த காலத்தின் போதும், இராணுவம் மற்றும் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு ஏற்பவும் இராணுவத்திடம் ஒப்படைத்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோரை தேடுதல் என பல பிரச்சனைகள் உள்ளன. இவை அன்றாடம் அவர்களது வாழ்வியலில் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றன. இதில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் என்பது ஏனையவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டதும் ஆழமாக நோக்கப்பட வேண்டியதும் ஆகும்.

இலங்கை நாட்டைப் பொறுத்தவரை யுத்த காலத்தின் போது முப்படைகள், பொலிஸார் மற்றும் புலனாய்வுத் துறையினரால் சந்தேகத்தின் பேரிலும், சுற்றி வளைப்புக்களின் போதும் கைது செய்யப்பட்டவர்களும், இறுதி யுத்தத்தின் போது அரசாங்கத்தினதும், இராணுவத்தினதும் அறிவிப்புக்கு அமைய பலர் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டோருமே காணாமல் ஆக்கப்பட்டோராகவுள்ளனர். சுமார் 16 ஆயிரம் தொடக்கம் 20 ஆயிரம் வரையிலானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் எனச் சர்வதேச நிறுவனங்களினதும், மனிதவுரிமை செயற்பாட்டாளர்களினதும் அறிக்கைகளின் மூலம் அறிய முடிகின்றது. இதன் எண்ணிக்கையை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை. இவர்களுக்கான தீர்வு என்பது தமிழ் மக்களின் மத்தியில் பதற்றத்தினையும், ஏமாற்றத்தினையும் கொடுத்து இன்று வரை அது கானல் நீராகவே உள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமல் ஆக்கப்படுவோர் குறித்து காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய அரசியல் புறச் சூழல் எதுவும் காணப்படவில்லை. ஆனால் இன்று யுத்தம் முடிந்து 16 வருடங்கள் கடந்து விட்ட போதும் அதில் உள்ள முன்னேற்றம் என்பது கண்துடைப்புக்களுடனேயே உள்ளது.

தற்போதைய அநுரகுமார திஸநாயக்கா தலைமையிலான அரசாங்கமானது தேர்தலின் போது காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி வழங்கப்படும் என உறுதியளித்த நிலையில் இன்று ஆட்சி பீடம் ஏறி மாதங்கள் பல கடந்த நிலையிலும் அது குறித்து மௌனமாக இருப்பது கடந்த அரசாங்கத்தைப் போன்றே இவர்களது செயற்பாடும் அமையப் போகின்றது என்ற சந்தேகத்தையே தோற்றுவித்துள்ளது. கடந்த சந்திரிகா, ரணில் மற்றும் மைத்திரி கூட்டரசாங்கமானது பொறுப்பு கூறுவதற்கான ஐ.நா மனித உரிமைப் பேரவையின் இரண்டு பிரேரணைகளை ஏற்று அவற்றை நிறைவேற்றுவதற்கு இணை அனுசரணையும் வழங்கியிருந்தது. அத்துடன் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றினையும் நிறுவியுள்ளது. ஆயினும் சர்வதேச அழுத்தத்தைக் குறைப்பதற்காகவும், கால நீடிப்புக்கள்

தொடர்ச்சி ▼

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி: அநுர அரசின் நிலைப்பாடுதான் என்ன...?

தொடர்ச்சி▲

ஊடாக அதனை நீர்த்துப் போகச் செய்யவதற்காகவும் இவற்றின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, அதில் எந்த முன்னேற்றத்தையும் அவதானிக்க முடியவில்லை.

அவர்கள் இறந்து விட்டார்கள் என்றால் ஒரேயடியாக அழுது தீர்த்து விதியைத் திட்டி கண்ணீரால் காயத்தை ஆற்றிவிடலாம். அவர்களுக்குரிய கிரியைகளை நடத்தி ஆத்ம சாந்திக்காக வழிபடலாம். ஆனால் தம் உறவுகளுக்கு என்ன நடந்தது, உயிரோடு இருக்கிறார்களா, இல்லையா, இன்று வருவார்களா, நாளை வருவார்களா எனத் தினம் தினம் எதிர்பார்ப்போடு செத்துப் பிழைப்பது எத்தனை கொடுமையானது. இந்த நிலைமை வார்த்தைகளுக்குக் கட்டுப்படாதது. அனுபவிப்பவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ளக்கூடிய துயரத்தின் உச்சம் அது. அந்த உச்சகட்ட துயரத்துடனேயே காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது பிள்ளைகள், தமது கணவன்மார், மனைவிமார், உறவுகள் மீள வருவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருக்கின்றனர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை எண்ணி தினம் தினம் செத்துக் கொண்டிருக்கின்றார்கள். கால நீடிப்புக்களும், இழுத்தடிப்புக்களும் செய்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் அரசாங்கம் யாருக்குப் பொறுப்புக் கூற போகிறது? காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடி அலைந்து திரிந்து நாளாந்தம் போராட்டம் நடத்திய தாய்மார்கள் மரணித்திருக்கின்றார்கள். அவர்கள் தமது பிள்ளைகளின் முடிவு தெரியாமலேயே தமது உயிரையும் மாய்த்து விட்டார்கள். இந்த நிலையை நீடிக்க விடுவதா அல்லது அந்த மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதா என்பதை தமிழ் தலைமைகள் உணரவேண்டும்.

வடக்கு- கிழக்கு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டங்கள் ஆண்டுகள் பல கடந்தும் நீண்டுகொண்டிருக்கிறது. அவ்வப்போது காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் போராட்டங்களும், ஊர்வலங்களும் நடைபெற்றும் வருகின்றன. மக்களின் கண்ணீரால் அந்த பிரதேசங்கள் தினமும் நனைந்து கொண்டிருக்கின்றன. போராட்டங்களில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும், தமிழ் தேசியக் கட்சிகளால் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன. அந்த மக்கள் அரசாங்கம் மீதும், தமிழ் தலைமைகள் மீதும் அதிருப்தி கொண்டவர்களாக மாறியிருக்கின்றார்கள். தொடர் போராட்டங்களால் உடல், உள ரீதியாகவும் கடுமையாக பாதிப்படைந்திருக்கின்றார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டோர் பலர் சிறைச்சாலைகளிலும், இராணுவ தடுப்பு முகாம்களிலும் மற்றும் சித்திரவதைக் கூடங்களிலும் இருக்கின்றனர் என ஆதாரங்கள் பலவும், தகவல்களும் வெளியாகியிருந்த நிலையில் கூட அவர்களை விடுவிப்பதற்கும் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அறிவதற்கும் சர்வதேச அழுத்தத்தின் ஊடாக இலங்கை அரசாங்கத்தை பதில் அளிக்க வலியுறுத்தும் நிலையில் தமிழ் தலைமைகள் ஒற்றுமையாக செயற்படாமை என்பது நம்பிக்கையோடு இருக்கும் அந்த மக்களின் மனங்களில் பலத்த சலனங்களை உருவாக்கியிருக்கிறது.

நாடு கடந்த நிலையில் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் உறவுகள் கூட தமது நாட்டையும், மக்களையும் நேசித்தவர்களாக இந்த நாட்டில் இடம்பெற்ற உரிமைப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும், அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டும் என வலியுறுத்திய மாபெரும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர். அதில் பல ஈழ உணர்வாளர்கள் கலந்து கொண்டு தமது உறவுகளுக்காக குரல் கொடுத்திருந்தார்கள். ஆனால் இங்கு பாதிக்கப்பட்ட அந்த மக்களது வாக்கில் பதவிகளையும், சொகுசு வாழ்க்கையும் பெற்று வலம் வரும் அந்த மக்களின் தலைவர்கள் நடந்து கொள்ளும் விதத்தை பார்க்கும் போது மிகவும் வேதனையாகவே இருக்கிறது.

காணாமல் போனோருக்கான செயலகம் தொடர்பில் ஐ.நா பரிந்துரையை ஏற்று கடந்த கால அரசாங்கத்தினால் சட்டமூலம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. காணாமல் போனோருக்கான செயலகம் உருவாக்குதல் மற்றும் நிர்வாகமும் கடமைகளை நிறைவேற்றலும் என்ற பெயரிலான அந்த சட்டம் நடைமுறைக்கும் வந்துள்ளது. இருப்பினும் அந்த அலுவலகம் குறித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும், மனிதவுரிமையாளர்களும், சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றனர். இந்த அலுவலகத்தின் கடந்த கால செயற்பாடுகளைப் பார்க்கின்ற போதும் அது வெறும் கண்துடைப்பு அலுவலகமாகவே அமையப் போகின்றது என்பது புலனாகின்றது.

ஆக, இந்த நாட்டில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தை இந்த அரசாங்கம் சிரத்தையுடன் கையாள்வதாக தெரியவில்லை. இரகசிய தடுப்பு முகாம்கள், சிறைச்சாலைகள் எனத் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர் விவரங்களை வெளியிட்டு அவர்களை அவர்களது குடும்பத்துடன் இணைக்க வேண்டும். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோர் கொல்லப்பட்டிருந்தால் அவர்களுக்கான இழப்பீடு சர்வதேச சட்ட நியாயங்களுக்கு ஏதுவான நிலையில் வழங்க வேண்டும். அவர்கள் உயிருடன் இந்த காலப்பகுதியில் உழைத்திருக்க கூடிய பணத்தை வழங்குவதன் மூலமும் அவர்கள் கொல்லப்பட்ட காலப்பகுதியில் இருந்து அவர்களுக்கான ஓர் ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் அந்தக் குடும்பங்களின் பொருளாதார நிலையை என்றாலும் குறைந்த பட்சம் தீர்க்க முடியும். உயிருக்கான விலை பணம் என்பது அல்ல. ஆனால் கொல்லப்பட்டிருந்தால் அதற்குரிய பரிகாரமாக இழப்பீடு வழங்கப்படுவதும் அந்த கொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதும் கட்டாயமானதே. இதன் மூலமே மீள நிகழாமையை உருவாக்க முடியும்.

# புலிகளின் காலத்தில் இல்லாத போதைப்பொருள் ஊடுருவல் தற்போது அதிகரித்துள்ளமையால் மக்கள் பெரிதும் பாதிப்பு!

## கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

**(பாலநாதன் சதீசன்)**

தமிழீழ விடுதலைப் புலிகளின் காலத்தில் இல்லாத போதைப்பொருள் ஊடுருவல்கள் தற்போது அதிகரித்துள்ளன எனச் சுட்டிக்காட்டிய வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், இவ்வாறான சட்டவிரோத போதைப் பொருள்களின் ஊடுருவல்களால் மக்கள் பலர் உயிரிழந்துள்ளமையுடன், மேலும் பலர் உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், திருட்டுக்கள், சட்டவிரோத செயற்பாடுகள், சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளன எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே அதிகரித்துள்ள சட்டவிரோத போதைப்பொருள் ஊடுருவல்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சை அவர் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவு – செலவுத்திட்டத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

புதிய அரசானது “கிளீன் சிறீலங்கா“ என்ற திட்டத்தை ஏற்படுத்தி நடைமுறைப் படுத்தும் எண்ணத்தை, செயலை நாமும் முற்றுமுழுதாக வரவேற்கின்றோம். இந்த நாட்டில் அனைத்துப் பகுதிகளிலும் தற்போது போதைப்பொருள் பாவனை தலைவிரித்து ஆடுகின்றது. அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனையாலும், போதைப்பொருள் ஊடுருவல்களாலும் நாடு முழுவதும் தள்ளாடுகின்றது.

எங்களுடைய வடக்கு, கிழக்கில் 2009 ஆம் ஆண்டிற்கு முன்பு இவ்வாறான நிலமைகள் இருந்ததில்லை. அதுவும் வடக்கிலே மிகக் கட்டுப்படாக இருந்த போதைப்பொருள் பாவனைகள், தற்போது மிகவும் அதிகமாகி “கிளீன் சிறிலங்கா“ என்ற செயற்பாட்டிற்கு எதிரான வகையில் உள்ளது.

நான் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவன். வன்னித்தேர்தல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துபவன். வன்னியில் மிகமோசமாக, கசிப்பு, கஞ்சா, ஐஸ், ஹெரோயின் இன்னும் பல பெயர்களில் சட்டவிரோத போதைப்பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன.

முல்லைத்தீவில் படையினர் மிக அதிகமாக உள்ளனர் எனப் பல புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இவற்றுக்கு மத்தியில் போதைப்பொருள் பாவனையும் அளவிற்கதிகமாக அந்தப் பகுதிகளில் உலாவருகின்றது. இதனைப் பொதுமக்கள் பாதுகாப்பினையும், நாட்டைத் தூய்மையாக்கும் பணியிலும் ஈடுபடும் பாதுகாப்புத்தரப்பினால் கட்டுப்படுத்த முட்டியாமல் உள்ளமை ஏன்?

குறிப்பாக கசிப்பு என்ற சட்டவிரோத போதைப்பொருள் மிக அதிகமாகப் பாவனையில் உள்ளதாகவும், கசிப்பை உற்பத்தி செய்யும் சட்டவிரோத உற்பத்தி



யாளர்கள் பல்வேறு நவீன வழிளை மேற்கொண்டு கசிப்பு உற்பத்தியில் ஈடுபடுகின்றனர் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கசிப்பு உற்பத்தியாளர்களின் வீடுகளில் (சிலர்) குடிநீர்க்குழாய் திறக்கும் போது கசிப்பு வருவதாக மக்கள் எம்மிடம் தெரிவிக்கின்றார்கள். இவ்வாறான சம்பவம் ஒரு இடத்தில் இடம்பெற்று பிடிபட்டுள்ளது. இவ்வாறான சூட்சுமமான முறைகளில் மேற்கொள்ளப்படுகின்றன. வீடுகளுக்குள் சுரங்கம் தோண்டி அதற்குள்ளும் கசிப்பு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நான் கிராமங்கள்தோறும் மக்கள் குறைகேள் சந்திப்புகளை நடத்தி வருகின்றேன். அந்த வகையில் கடந்தமாதம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வெள்ளப் பள்ளம் என்ற கிராமத்தில் இடம்பெற்ற எனது மக்கள் குறைகேள. சந்திப்பில் பெருமளவு மக்கள் கூடியிருந்து என்னிடம் கைகூப்பி வேண்டினார்கள், சிலர் அழுதார்கள். தங்களுடைய குடும்பங்கள் சீரழிகின்றன என்றும், இதனைக் கட்டுப்படுத்துங்கள், ஜனாதிபதியிடம் சொல்லுங்கள், நாடாளுமன்றத்தில் சொல்லுங்கள் எனத் தெரிவித்தனர். தங்களுடைய கிராமத்தில் கசிப்பு, கஞ்சா உள்ளிட்ட சட்டவிரோத போதைப்பொருள்களால் இதுவரை 13பேர் இறந்துவிட்டனர் எனவும், சிலர் இறக்கும் நிலையில் இருக்கின்றனர் எனவும் மக்களால் என்னிடம் முறையிடப்பட்டது.

இதேபோல பாரதிபுரம், வள்ளுவர்புரம், இளங்கோபுரம், தேராவில் பகுதிகளில் இதுவரை 43பேர் மாண்டுவிட்டனர் எனவும், இன்னும் இறக்கும் நிலையில் சிலர் இருக்கின்றனர் எனவும் தெரிவித்து, தங்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றும்படி வேண்டுகின்றார்கள். இப்படி நிலைமைகள் இன்னும் பல கிராமங்களில் உள்ளன. கசிப்பு உற்பத்தி இடம்பெறும் சில இடங்களை தாங்களே காட்டுவதாக மக்கள் சொல்கின்றார்கள்.

தற்போதைய பொருளாதார வீழ்ச்சியால் மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடாத்திசெல்வதில் பலத்த இடர்பாடுகள் இருக்கும்போது இந்தப் போதைப்பொருள் பிரச்சினை மிகவும் மோசமாகவுள்ளது.

இது தொடர்பில் இன்னுமொரு சம்பவத்தை இங்கு தெரிவிக்கலாமென நினைக்கின்றேன். ஒரு அம்மாவும் அவருடைய மகளும் எனது அலுவலகத்திற்கு வருகைதந்து அழுதார்கள். தந்தையின் கசிப்பு பாவனையால் வீட்டில் ஒவ்வொரு நாளும் பிரச்ச்ஜ்னை எனவும், வீட்டிலுள்ள வயது வந்த மூன்று பிள்ளைகளும், தற்கொலை செய்யப் போகிறார்கள் எனச் சொல்கின்றார்கள் என அழுதார்கள். நிலைமைகளைச் சற்று எண்ணிப்பாருங்கள். பொலிஸார் என்ன பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். ஏன் இவர்களால் போதைப்பொருள் உற்பத்திகளையும், ஊடுருவல்களையும் கட்டுப் படுத்த முடியவில்லை?

இந் நிலையில் பொலிஸார் சில பேர் இதற்கு உடைந்தையாகச் செயற்படுகின்றனர் எனவும் மக்கள் முறையிடுகின்றார்கள். தாங்கள் பொலிஸாரிடம் முறைப்பாடுகளை மேற்கொள்ளும்போது, தங்களை கசிப்பு உற்பத்தியாளர்களிடம் பொலிஸார் காட்டிக்கொடுக்கின்றனர் என மக்கள் எம்மிடம் முறையிடுகின்றார்கள்.

விடுதலைப் புலிகள் இருந்தகாலத்தில் “கிளீன் சிறிலங்கா“ என நாடு முழுவதும் இல்லாவிட்டாலும், அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்த இடங்கள் கிளீனாக இருந்தன். போதைப்பொருள் பாவனை இல்லாத ஒருபகுதி இருந்தது. இதனை யாரும் மறுக்கமுடியாது.

மிக அதிகமாக பொலிஸாரும், படையினரும் இருக்கும் இப்போது இதனைக் கட்டுப்படுத்தாது கசிப்பு உற்பத்தி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

போதைப்பொருள்களின் ஊடுருவல்களால் பலகுடும்பங்கள் பசிபட்டினியுடன் காணப்படும் அவலம், பல திருட்டு சம்பவங்கள் இடம்பெறும் நிலைமை, இதனைவிட ஒருதொகுதி இளைஞர்குழாம் போதைக்கு அடிமையாகி மரணிக்கும் அவலம், அதிகரிக்கும் சமூகச் சீர்கேடுகள் என துன்பியலான ஒரு நிலைமைக்குள் பொதுமக்கள. பலர் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் வன்னிப்பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு மரக்கடத்தல்களும் இடம்பெறுகின்றன. சில இடங்களில் மணல்கொள்ளை, கிரவல் அகழ்வு இவ்வாறான சட்டவிரோத செயல்பாடுகளில் ஈடுபடுகின்றவர்கள். போதைக்கு அடிமையானவர்களே இதில் அதிகம் உள்ளனர் என அறியக்கூடியதாகவுள்ளது.

அதேவேளை மற்றுமொரு சம்பவம் நடந்துள்ளது. அண்மையில் முல்லைத்தீவு மல்லாவிப் பகுதியில் அமைந்துள்ள யோகபுரம் பாடசாலைக்குள் சிவில் உடையில் மது போதையில் நுழைந்த பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவர் பாடசாலை மாணவிகளுடன் முறையற்ற விதத்தில் நடந்துகொண்டுள்ளார். இந் நிலையில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததற்கமைய அவர் கைதுசெய்யப்பட்டு எதிர்வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளார். இத்தகைய செயலுக்கு மிகவும் கடுமையான தண்டனை வழங்கப் பட வேண்டும்.

இந்தவிடயத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் தெரிவித்து, சம்பவ வீடியோ ஆதாரமும் வழங்கியுள்ளோம்.

தொடர்ச்சி ▼

# புலிகளின் காலத்தில் இல்லாத போதைப்பொருள் ஊடுருவல் தற்போது அதிகரித்துள்ளமையால் மக்கள் பெரிதும் பாதிப்பு!

தொடர்ச்சி▲

ஒரு காலத்தில் எமது இடத்தில் – முல்லைத்தீவில் – பெண்கள் இரவு நேரத்தில் கூட தனியாக செல்லக்கூடிய சுதந்திரம் இருந்தது. ஆனால் இப்போது அப்படி இல்லை.

குப்பைகளை மட்டும் கூட்டி "கிளீன் சிறீலங்கா"ஆக்கமுடியாது. சட்டம்/ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும். சட்டவிரோத மது உற்பத்திகள், சட்டவிரோத மரக்கடத்தல்கள், சட்டவிரோத மணல், கிரவல் கொள்ளைகள், சட்டவிரோத கால்நடைக் களவுகள், கடத்தல்கள், இப்படி ஏராளமாக இருக்கும் குற்றச்செயல்கள் களையப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் மனதில் இடம்பிடிக்கமுடியும். நாடும் "கிளீன் சிறீலங்கா" ஆகும்.

சட்டவிரோத போதைப் பொருள் குற்றச் செயல்களில் ஈடுபடும் பொலிஸார் மற்றும். பாதுகாப்புத்தரப்பினராக இருந்தால் பணியிலிருந்து நீக்கி புனர்வாழ்வு அளியுங்கள். அடுதேபோல் சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்களையும் கைதுசெய்து புனர்வாழ்வு அளியுங்கள். இவ்வாறு புனர்வாழ்வு அளிப்பதன் மூலமாவே ஒருசீரான, போதையற்ற தூய்மையான, சமூகக்கட்டமைப்பை ஏற்படுத்த முடியும். ஒரு நேர்த்தியானதும், இறுக்கமானதுமான அரசநிர்வாக கட்டமைப்பையும் ஏற்படுத்தமுடியும். இதன் மூலமே பொலிஸார் மீது மக்கள் வைத்துள்ள தப்பான கண்ணோட்டத்தில் மாற்றம் ஏற்படும்.

அவ்வாறாக தங்களின் "கிளீன் சிறீலங்கா" திட்டத்தை சீராகச் செய்து தூய்மையான அரச கட்டமைப்பையும், தூய்மையான சமூகக் கட்டமைப்புக்களையும் ஏற்படுத்தி, மக்கள் மனங்களில் நம்பிக்கையை ஏற்படுத்துங்கள். பொலிஸாரிடமோ, பாதுகாப்புத் தரப்பினரிடமோ சென்றால் தமக்கு தீர்வு கிடைக்கும் என்ற மனநிலையை மக்களிடம் கொண்டு வாருங்கள்.

இந்த நிலமைகளை சீராக்கி கொண்டு வந்து பாருங்கள். வளமான நாடு, அழகான வாழ்க்கை, நாடு கிளீன் சிறீலங்கா ஆகிவிடும். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு மேற்படி விடயங்களைக் கொண்டுவருகின்றேன் – என்றார்.

# யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராகக் கலாநிதி ரி.விக்னேஸ்வரன்!



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராக கலைப் பீடத்தின் அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி ரி.விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஆசிரியர் சங்கத்தின் ஒத்திவைக்கப்பட்ட நிர்வாக சபைத் தெரிவு நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்தத் தெரிவின் போது 39 மேலதிக வாக்குகளைப் பெற்றுத் தலைவராக விக்னேஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார்.

கல்வித்துறையைச் சேர்ந்த ஆர். சர்வேஸ்வரா செயலாளராகவும், பொருளாளராக வணிகத்துறையைச் சேர்ந்த ஆர். கஜானந்தனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# யாழ்ப்பாணம், கிழக்குப் பல்கலைகளுக்கு பேரவையை நியமிப்பதில் பெரும் இழுபறி!

## அரசியல் தலையீட்டினால் திணறும் ஆணைக்குழு

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் பேரவைக்கு வெளிவாரி உறுப்பினர்களை நியமிப்பதில் அரசியல் அழுத்தம் காரணமாகப் பெரும் இழுபறி நிலை தோன்றியிருப்பதாக அறியவருகிறது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் – கடந்த 13ஆம் திகதியுடன் செயற்படும் வகையில் நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பதவியில் இருந்த வெளிவாரிப் பேரவை உறுப்பினர்களைப் பதவி விலகுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன கோரியிருந்தார்.

இதனையடுத்து, வவுனியாப் பல்கலைக்கழகம் தவிர்ந்த அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் பேரவைகள் செயற்பட முடியாமல் முடங்கிப் போயிருந்தன. பல்கலைக்கழகங்களின் நாளாந்த நடவடிக்கைகள் தவிர, நேர்முகத் தேர்வுகள், நியமனங்கள், திட்ட அங்கீகாரங்கள் உட்பட எந்தவொரு தீர்மானங்களும் இயற்றப்பட முடியாத நிலை ஏற்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி தென்.கிழக்கு பல்கலைக்கழகத்துக்கான வெளிவாரிப் பேரவை உறுப்பினர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டிருந்தனர். சமகாலத்தில் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் பேரவைகளுக்கும் உறுப்பினர்களை நியமித்து அறிவிப்பதற்குப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தயாராக இருந்த போதிலும், வழமை போன்று – முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் நடைபெற்றமை போல, கடைசி நேர அரசியல் அழுத்தம் காரணமாக பேரவை உறுப்பினர் நியமனம் பிற்போடப்பட்டுள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

ஏற்கனவே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட பட்டியல்கள் இரண்டு தடவைகள் மறுபரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அதன் பின்னரும் கூடப் பட்டியலை வெளியிட முடியாத நிலை காணப்படுவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் உள்வாரிப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட ஓர் உறுப்பினர் அதிகமான எண்ணிக்கைக்கு வெளிவாரி உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்படுவது வழமையாகும். பல்கலைக்கழகப் பேரவை ஒன்றின் வெளிவாரி உறுப்பினராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் ஒரு பட்டதாரியாக இருத்தல் வேண்டும் அல்லது முகாமைத்துவத்தில் மீயுயர் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும் என்ற அடிப்படைத் தகுதியுடன், பால்நிலை சமத்துவம், சமய ரீதியான பிரதிநிதித்துவத்துடன், சமூக நலன் சார்ந்த உயர் சிந்தனையுடைய நபர்களையே வெளிவாரி உறுப்பினர்களாக நியமிக்கலாம் என்ற வரையறை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வரையறுக்கப்பட்டிருக்கின்ற போதிலும், ஆட்சியதிகாரத்திலுள்ள கட்சிகளின் சிபார்சின் அடிப்படையிலேயே இதுவரை காலமும் பேரவைக்கான வெளிவாரி உறுப்பினர்கள் நியமனம் இடம்பெற்று வந்துள்ளமையும், யாழ்பாணத்தில் மிக நீண்டகாலமாக அமைச்சர் ஒருவரின் செல்வாக்கில் நியமனங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



# உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக சர்வஜன அதிகாரம் கட்சியினர் சந்திப்பு

## உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான கலந்துரையாடல்

**(கி.வசந்தன்)**

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பாக சர்வஜன அதிகாரம் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு ஒன்று வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் பிரியந்த குமார் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் கட்சியின் தேசிய அமைப்பாளர் திலும் அமுனுகல, கட்சியின் பிரதித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை முன்வைத்திருந்தனர்.

குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலில் கட்சி போட்டியிடவுள்ளமை தொடர்பாகவும், கட்சியின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்களிற்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.
















# அகில இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இந்தியத் தூதர் சந்தோஷ் ஜாவுடன் நேற்றுப் பேச்சு

## ஊடகப் பயிற்சிகளுக்கு உதவி வழங்குவது குறித்து உறுதியளிப்பு

இலங்கையிலுள்ள தமிழ் ஊடகர்களுக்கு தொழில்வாண்மைக்கான பயிற்சிகள் தேவைப்படின் அவற்றை வழங்க முடியுமென்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா நேற்று வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

அகில இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளை கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போது உயர்ஸ்தானிகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ் ஊடகவியலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள், ஊடகத் தொழிலை செய்யும்போது அவர்களுக்குத் தேவையான பயிற்சிகள், இலத்திரனியல் ஊடகவியலாளர்களுக்காக நவீன ஊடகப் பயிற்சிகள், ஊடகத் தொழிலுக்கு தேவையான உபகரணங்கள் உட்பட்ட பல விடயங்கள் குறித்து இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

தமிழ் ஊடகத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவதானமாக கேட்டுக்கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர், இந்தியாவில் நடைமுறையில் உள்ள நவீன ஊடக யுக்திகள், அச்சு, இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்கள் தொடர்பிலான பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை எடுப்பார் எனக் குறிப்பிட்டார்.

பிராந்திய செய்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்கள் மீதான அடக்குமுறைகள், விசாரணை என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் அழுத்தம், செய்திகள் எழுதுவதால் அவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை அகில இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் இந்தச் சந்திப்பில் விவரமாக குறிப்பிட்டதுடன் மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மலையகப் பகுதிகளில் ஊடகர்கள் மீது பிரயோகிக்கப்பட்ட அழுத்தங்களையும் எடுத்துரைத்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இராஜதந்திர மட்டங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய தலையீடுகளையும் ஒன்றியம் இதன்போது சுட்டிக்காட்டியது.

இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களுக்கு வீட்டு வசதிகளை செய்வது குறித்தான யோசனையொன்றும் ஒன்றியத்தால் தூதுவரிடம் முன்வைக்கப்பட்டது. அதேபோல் தமிழ் ஊடகர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், பிரச்சினைகள் குறித்து விரிவான மகஜர் ஒன்றும் இந்தச் சந்திப்பின்போது உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டது.







# உத்தரகண்டில் பனிச்சரிவில் சிக்கினர் 57 தொழிலாளர்கள்

உத்தராகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஏற்பட்ட பனிச்சரிவில், எல்லைப் பகுதிகளில் வீதிகள் அமைக்கும் இராணுவப் பிரிவைச் சேர்ந்த 57 தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர்.

இந்த நிலையில், அவர்களில் 16 பேர் மீட்கப்பட்டுள்ளனர். ஏனைய 41 பேரை மீட்கும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சமோலி மாவட்டத்தில் உள்ள எல்லை கிராமமான மனா அருகே நேற்று வெள்ளிக்கிழமை காலை ஏற்பட்ட பனிச்சரிவில், எல்லைச் வீதிகள் அமைப்பு (BRO) எனும் இராணுவப் பிரிவைச் சேர்ந்த 57 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். இதையடுத்து, அவர்களை மீட்கும் பணியில் இராணுவம் ஈடுபடத் தொடங்கியது. மீட்புப் பணி தொடர்பாக பேசிய முதல்வர் புஷ்கர் சிங் தாமி,

சமோலியில் பனிச்சரிவில் சிக்கிய 57 தொழிலாளர்களில் 16 பேர் மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 4 பணியாளர்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர். மீதமுள்ளவர்களைக் காப்பாற்ற முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீட்புப்

## 16 பேர் மீட்பு

பணியில் ஐ.டி.பி.பி. (ITBP) மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 27 அன்று 2,400 மீற்றருக்கு மேல் உள்ள இடங்களில் பனிச்சரிவு எச்சரிக்கையை சண்டிகரில் உள்ள பாதுகாப்பு புவி தகவல் ஆராய்ச்சி நிறுவனம் (DGRE) வெளியிட்டது. சாமோலி, உத்தரகாசி, ருத்ரபிரயாக், பித்தோராகர் மற்றும் பாகேஷ்வர் மாவட்டங்களில் 2,400 மீற்றட்டருக்கு மேல் உள்ள இடங்களுக்கு 24 மணி நேர பனிச்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும்,டேராடூனில்உள்ளவானிலை ஆய்வு மையம் நேற்று வெள்ளிக்கிழமை காலை இந்த மாவட்டங்களில் 3,500 மீற்றர் மற்றும் அதற்கு மேல் உள்ள இடங்களில் கனமழை மற்றும் பனிப்பொழிவு ஏற்படும் என்றும் கணித்துள்ளது. இதைத் தொடர்ந்து, உத்தராகண்ட் அரசு, சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு எச்சரிக்கை விடுத்தது.

மனா மற்றும் மனா கணவாய்க்கு இடையில் ஏற்பட்ட பனிச்சரிவில் இவர்கள் சிக்கியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய சாமோலி மாவட்ட ஆட்சியர், மனா மற்றும் மனா கணவாய்க்கு இடையில் காலையில் பனிச்சரிவு ஏற்பட்டபோது 57 தொழிலாளர்கள் முகாமில் இருந்தனர்.

இவர்கள் திபெத் எல்லையை நோக்கிய இராணுவ நகர்வுக்கான பாதையில் வழக்கமான பனி அகற்றும் பணிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். தற்போது வரை உயிரிழப்பு குறித்த தகவல் இல்லை. மீட்புக் குழுக்கள் குவிக்கப்பட்டுள்ளன. அப்பகுதியில் பனிப்பொழிவு மற்றும் மழை காரணமாக, மீட்புப் பணிகள் மெதுவாக நடைபெற்று வருகின்றன" என்று கூறினார்.

இந்த விவகாரம் தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமியுடன் தொலைபேசியில் பேசினார். அப்போது, பனிச்சரிவில் சிக்கி அணுக முடியாத இடங்களில் உள்ள அனைவரையும் பாதுகாப்பாக மீட்பதே அரசாங்கத்தின் முன்னுரிமை என்று அவர் தெரிவித்துள்ளார்.

# வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் ஆஜரானார் சீமான்; பொலிஸார் விசாரணை



நடிகை விஜயலட்சுமி அளித்த பாலியல் துன்புறுத்தல் புகாரின் அடிப்படையில் பொலிஸ் வழங்கிய அழைப்பாணையை ஏற்று நேற்று இரவு 10 மணி அளவில் வளசரவாக்கம் பொலிஸ் நிலையத்தில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆஜரானார். அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தினர்.

நேற்று காலை 11 மணி அளவில் அவர் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென பொலிஸ் அழைப்பாணை அளித்தது. நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் இந்த நடவடிக்கையை பொலிஸ் மேற்கொண்டுள்ளது.

பொலிஸ் விசாரணைக்கு சீமான் ஆஜரான நிலையில், நாம் தமிழர் கட்சியின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் அதிகளவில் வளசரவாக்கம் பொலிஸ் நிலையம் அருகே திரண்டனர். அவர்களை கட்டுப்படுத்தும் வகையில் தடுப்புகளை பொலிஸ் அமைத்திருந்தது. பாதுகாப்பு கருதி 300 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.03.2025




இன்று நம்பிக்கை நிறைந்த நாள். உங்கள் இலக்குகளை அடைய தைரியம் மற்றும் உறுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும். மொத்தத்தில் வளர்ச்சி காணப்படும். இது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

இன்று உங்கள் பணிகளை புத்துணர்ச்சியுடனும் உற்சாகமுடனும் மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைகளை மேலதிகாரிகள் மதிப்பார்கள்.

உங்கள் துணையுடன் இனிமையாகப் பேசுவீர்கள். உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டம் நிறைந்து காணப்படும். உங்கள் நிதிநிலை உயரும்.

இன்று தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திடமான மன நிலையுடனும் காணப்படுவீர்கள்.




எதிர்மறை விளைவுகளை தடுக்க இந்து எந்த செயலையும் தொடங்குவதற்கு முன் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைவதில் தாமதங்கள் காணப்படும். நற்பலன்கள் காண்பதற்கு பொறுமை அவசியம்.

பணியிடத்தில் ஏதுவான சூழ்நிலை இருக்காது. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைப்பது அவசியம்.

கவனமற்ற வார்த்தைகளின் காரணமாக உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை லேசாக எடுத்துக்கொண்டு உங்கள துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பது சிறந்தது.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். இதனால் செயல்கள் சுமூகமாக நடக்கும். அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்த்திடுங்கள்.

உங்கள் கீழ் பணிவோருடன் மோதல்கள் காணப்படும். பணிகள் சுமூகமாக நடக்க பதற்றத்தை தவிர்த்தல் நல்லது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்த்திடுங்கள். இந்த உணர்வால் உறவில் மகிழ்ச்சி நிலவாது.

செலவுகள் அதிகமாவதைக் காண்பீர்கள். நிதியில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்த உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நீங்கள் ஆரோக்கியமாய் இருக்க உணவில் கவனம் தேவை. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் குணம் பெறலாம்.




இன்று அதிக முயற்சிகள் எடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். உங்கள் உறுதி மூலம் வெற்றியை அடைய இது உதவும். உங்கள் நம்பிக்கை மூலம் நீங்கள் உயர் நிலையை அடைவீர்கள்.

பணியிடச் சூழலில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய வாய்ப்புகள் காணப்படும்.

உங்கள் துணையுடன் நெருக்கமான பிணைப்பை வளர்ப்பீர்கள். சமநிலை அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் திருப்தி நிலவும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் நிதி சம்பந்தமான எதிர்கால நடவடிக்கைகளை நீங்கள் திட்டமிட இயலும்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்கள் மனதில் காணப்படும் திருப்தி காரணமாக நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




நீங்கள் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பொறுப்பு காரணமாக இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும். பாதுகாப்பின்மை உணர்வு காணப்படும்.

இன்று அதிக பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனவே உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற சமநிலை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

குழப்பமான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். உறவின் நல்லிணக்கம் பேண இத்தகைய உணர்வுகளை கைவிட வேண்டும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். தற்போதைய நிலைமையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். தியானம் மற்றும் பிரார்த்தனை மூலம் நீங்கள் ஆறுதல் பெறலாம். இதனால் உங்களுக்கு நன்மை விளையும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் எதிர்கொள்வீர்கள். சக பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படும்.

உங்கள் உறவு நல்லுறவாக உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை பாதிக்கும் உணர்வுகளை தவிர்க்க வேண்டும். பதட்டமான சூழ்நிலை உறவை பாதிக்கும்.

இன்று கூடுதல் செலவுகள் செய்வீர்கள். பணப்பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று தொண்டை சம்பந்தமான தொல்லைகள் பாதிப்பை அளிக்கும்.




கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் பெறலாம். இது தான் இன்று மிகவும் தேவையானதாக இருக்கும். இன்றைய செயல்கள் யாவும் சுமூகமாக நடக்க விஷயங்களை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் பணிகளை சரியாக மேற்கொள்ள திட்டமிட்டு பணியாற்ற வேண்டும். பணியில் கெட்ட பெயர் ஏற்பட வாய்ப்புள்ளது. நீங்கள் சிறிது கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள். உங்கள் வருத்தமான மனநிலையை வெளிப்படுத்தாமல் இருப்பதன் மூலம் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையான நிதியை உருவாக்க நீங்கள் போராடுவீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். உங்கள் விருப்பங்களை எளிதில் பூர்த்தி செய்து கொள்வீர்கள். நீண்ட கால திட்டங்கள் பலனளிக்கும்.

பணியிடச் சூழல் உற்சாகத்தை அளிக்கும். மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் செயல்திறனில் பெருமை கொண்டு வரும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வை வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். இன்று கணிசமான தொகை காண்பீர்கள். மகிழ்ச்சி யான விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மற்றும் திருப்தியான மனநிலை காரணமாக உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.03.2025




உங்கள் உணர்வுகளை இன்று கட்டுபடுத்த வேண்டிய நாள். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருங்கள். நம்பிக்கை ஒன்றே வெற்றிக்கு வழி வகுக்கும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை சிறப்பாக ஆற்ற நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு உங்களுக்கு கிடைகாது.

உங்கள் துணையிடம் நீங்கள் தீவிரமாக நடந்து கொள்வீர்கள். நல்ல விளைவுகள் காண எதையும் லேசாக எடுத்துக் கொண்டு சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று விருப்பமான விளைவுகள் ஏற்படும் சூழ்நிலை இருக்காது. தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.




இன்றைய நாளை நீங்கள் சுமூகமாக கழிக்க இயலாது. உங்கள் போக்கில் சோம்பல் காணப்படும். தேவையற்ற குழப்பங்களால் எண்ணங்களில் தெளிவு இருக்காது. எதிர்மறை எண்ணங்களை தவிர்த்து நேர்மறை எண்ணம் கொள்ள வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்களின் குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். அத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

இன்று பண இழப்பு காணப்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. நல்ல விளைவுகளைக் காண நீங்கள் எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.

பணியிடத்தில் இருக்கமான பணிகள் காணப்படும். உங்கள் சக பணியாளர்களிடமிருந்து அதிக ஒத்துழைப்பு கிடைக்காது.

உறவில் மகிழ்ச்சியை தக்க வைக்க நகைச்சுவை அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். நீண்ட நெடிய வலுவான உறவுப் பிணைப்புக்கு முயற்சி எடுக்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவுகள் காணப்படும். குறைந்த பணத்தில் நிலைமையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று செழிப்பான நாள். நீங்கள் தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். இன்று முக்கியமான இலக்குகளை அடைவீர்கள்.

உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் தரமான பணிக்கு அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பான உறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

சிறந்த ஆற்றலும் தேக நிலையும் காணப்படும். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் சட்டத்தரணி ஒருவர் குற்றவாளி என அறிவிப்பு

## வவுனியா நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் கஞ்சாவை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டுத் தொடர்பில் சட்டத்தரணி ஒருவரைக் குற்றவாளியாக அடையாளம் கண்ட வவுனியா நீதிவான் நீதிமன்று அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து தீர்ப்பளித்ததாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று வவுனியா நீதுவான் நீதிமன்றில் வழக்கு விசாரணை இடம்பெற்ற போதே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கடந்த 2021 ஆம் ஆண்டு விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து செட்டிகுளம் பகுதியில் வைத்து இளம்சட்டத்தரணி ஒருவரிடம் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது அவரது உடமையில் கஞ்சா இருந்ததாக தெரிவித்து அந்த சட்டத்தரணி விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு செட்டிகுளம் பொலி



ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளின் பின் செட்டிகுளம் பொலிஸாரால் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சட்டத்தரணி விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டு, இது தொடர்பான வழக்கு வவுனியா நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வந்தது. இந்நிலையில் நேற்றையதினம் அதற்கான தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

கஞ்சாவை உடமையில் வைத்திருந்தமை மற்றும் அதனைக் கொண்டு சென்றமை என்பன தொடர்பாக சட்டத்தரணியை குற்றவாளியாக அடையாளம் கண்ட நீதிமன்றம் அவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துத் தீர்ப்பளித்தது.

இதேன்போது குற்றவாளியாகக் காணப்பட்ட சட்டத்தரணி சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள் மேன்முறையீடு தொடர்பான அறிவித்தலை நீதிமன்றில் வழங்கியதன் பிரகாரம் அவருக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணை வழங்கப்பட்டது.

இதேவேளை, மேற்படி சட்டத்தரணியும் வவுனியா நீதிமன்றத்தில் செயற்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.